# சுருக்க அறிக்கை

இலங்கைப் பொருளாதாரமானது இரு ஆண்டுகளுக்கு முன்னர் பதிவுசெய்யப்பட்ட அதன் மிக ஆழமான பொருளாதாரச் சரிவைத் தொடர்ந்து, 2024இல் தொடர்ந்து உறுதியுடன் மீட்சியடைந்தது. மீட்சிக்கான பாதை கடினமாக இருந்தபோதிலும், படுகடன் நெருக்கடியிலுள்ள ஏனைய பல நாடுகளுடன் ஒப்பிடுகையில் இது குறிப்பிட்டளவு துரிதமாகவிருந்தது. நெருக்கடிக்குப் பின்னரான சீர்திருத்தங்கள் சாதகமான பெறுபேறுகளைக் காண்பிக்கத் தொடங்கியுள்ளன. மேம்பட்ட பொருளாதார நடவடிக்கை, கொள்வனவு சக்தியில் ஏற்பட்ட ஓரளவு மீட்சி, மற்றும் குறைவடைந்த நிச்சயமற்றதன்மை என்பனவற்றின் அறிகுறிகள் புலப்படுகின்றன. சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தின் தொடர்ச்சி மற்றும் ஒத்திசைவான கொள்கைகள் என்பவற்றின் அறிகுறிகள் தென்பட்டமையினால், 2024இன் பிற்பகுதியில் தேர்தலுடன் தொடர்புடைய நிச்சயமற்றதன்மைகள் இல்லாதொழிந்தன. இதனுடன் இணைந்து அண்மையில் நிறைவடையும் நிலையிலுள்ள வெளிநாட்டுப் படுகடன் மறுசீரமைப்புக்கள் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட வங்குரோத்துத் தரமிடலிலிருந்து நாடு விடுபட்டமை போன்றவை முதலீட்டாளரினதும் ஆர்வலர்களினதும் நம்பிக்கையை மேம்படுத்தியுள்ளன.

பொருளாதார வளர்ச்சியினைப் பொறுத்தவரையில், இலங்கை 2024இல் எதிர்ப்பார்க்கப்பட்டதை விடவும் சிறப்பான செயலாற்றத்தை எடுத்துக்காட்டியது. பணவீக்கம் மெதுவடைந்ததுடன் வலு விலைகளில் ஏற்பட்ட பாரியளவிலான குறைப்புக்களினால் உந்தப்பட்டு 2024 செத்தெம்பரிலிருந்து பணச்சுருக்கம் பதிவுசெய்யப்பட்டது. இதன்விளைவாக, பணவீக்கம் அதன் இலக்கிலிருந்து கீழ்நோக்கி விலகலடைந்தது. குறைந்தளவான வட்டி வீதங்களினால் ஆதரவளிக்கப்பட்டு, 2024இல் வீட்டுத்துறைகளுக்கும் வியாபாரங்களுக்குமான கொடுகடன் விரிவடைந்தது. தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைமையானது உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கையின் துரித மீட்சிக்குப் பங்களித்து, உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில் இழந்த உற்பத்தியை ஓரளவுக்கு மீட்டெடுக்கச் செய்தது. அதேவேளை, வெளிநாட்டுத் துறைச் செயலாற்றமானது ஆண்டுகாலப்பகுதியில் வலுவாகவிருந்தது. நாட்டிற்கான அதிகரித்த தேறிய வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களுடன் இணைந்து, வெளிநாட்டுத் தாங்கிருப்புக்களில் குறிப்பிடத்தக்க மேம்பாடொன்று அவதானிக்கப்பட்டது. வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மிகையொன்றினைத் தொடர்ந்தும் பதிவுசெய்தது. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த வெளிநாட்டுச் செலாவணி வீதக் கொள்கையின் கீழ் இலங்கை ரூபாவின் பெறுமதியுயர்வடைந்தது. நாணயத்தின் பெறுமதியுயர்வடைதலின் மூலம் ஏற்பட்ட நன்மையானது தாழ்ந்தளவிலான இறக்குமதி விலைகளினூடாக நுகர்வோருக்குப் பயனளித்திருந்தது. இருந்தபோதிலும், இது வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுபவர்களின் மீது பாதமாகமான தாக்கங்களைக் கொண்டிருந்தது. தொடர்ச்சியாக இரு ஆண்டுகாலத்திற்கு முதலாந்தர நிலுவையில் பதிவுசெய்யப்பட்ட மிகையுடன், இறைத் துறைச் செயலாற்றமானது 2024இல் குறிப்பிடத்தக்களவில் முன்னேற்றமடைந்தது.

2023இல் அடையப்பட்ட முன்னேற்றங்களைத் தொடர்ந்து, உள்நாட்டு விலை உறுதிப்பாட்டையும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டையும் நிலைநிறுத்துவதில் மத்திய வங்கியின் கொள்கைகள் கவனம்செலுத்தின. நெகிழ்ச்சித்தன்மைவாய்ந்த பணவீக்க இலக்கிடல் கட்டமைப்பின் கீழான முன்னுரிமைகளுக்கமைய, சாதகமான பணவீக்கத் தோற்றப்பாட்டைக் கருத்திற்கொண்டு, அதன்மூலம் உள்நாட்டுப் பொருளாதார நடவடிக்கைக்கு ஆதரவளிக்கும் விதத்தில், தளர்த்தப்பட்ட

நாணயக் கொள்கை நிலைப்பாட்டை மத்திய வங்கி தொடர்ந்தும் பேணியது. அதேவேளை, மேம்பட்ட வெளிநாட்டுத் துறைச் செயலாற்றத்தின் காரணமாக மத்திய வங்கியுடனான கலந்தாலோசனைக்கமைய, இறக்குமதிகள் மற்றும் மூலதனப் பாய்ச்சல்கள் மீது காணப்பட்ட மீதமுள்ள கட்டுப்பாடுகள் அரசாங்கத்தினால் படிப்படியாக தளர்த்தப்பட்டன. உரிமம்பெற்ற வங்கிகளின் ஆளுகைக்கான சட்டக் கட்டமைப்பை வலுப்படுத்துகின்ற வங்கித்தொழில் (திருத்தச்) சட்டத்தின் சட்டவாக்கத்துடன் நிதியியல் முறைமை உறுதிப்பாடு வலுப்படுத்தப்பட்டது. மேம்பட்ட பேரண்டபொருளாதார நிலைமைகளினால் ஆதரவளிக்கப்பட்டு நிதியியல் துறையின் ஒட்டுமொத்த செயலாற்றமானது 2024 காலப்பகுதியில் படிப்படியாகத் தொடர்ந்தும் முன்னேற்றமடைந்தது. ஆண்டுகாலப்பகுதியில், இடர்நேர்வு முகாமைத்துவம் மற்றும் நிறுவன ஆளுகை என்பன மீதான ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளும் அறிமுகப்படுத்தப்பட்டன. நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகளுக்கு ஆதரவளிப்பதற்காக உரிமம்பெற்ற வங்கிகளில் வியாபார மீட்புப் பிரிவுகளைத் தாபிப்பதில் விசேட கவனம்செலுத்தப்பட்டது. நிதியியல் அறிவை மேம்படுத்துவதற்கும், நிதியியல் வசதிக்குட்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் மற்றும் நிதியியல் துறையில் இலத்திரனியல் உருமாற்றத்தினை மேம்படுத்துவதற்கும் மத்திய வங்கி அதன் முயற்சிகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தது.

2022இல் ஏற்பட்ட முன்னெப்பொழுதுமில்லாத பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து, ஆழமாக வேரூன்றிய கட்டமைப்புசார் பலவீனங்களைச் சரிசெய்வதனை நாட்டின் சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டமானது இலக்காகக் கொண்டிருந்தது. பொருளாதார மீட்சிக்கு ஆதரவளிக்கும் அதேவேளை படுகடன் நீடித்துநிலைத்திருக்கும் தன்மையை அடைவதற்குத் தொடர்ச்சியான இறைத் திரட்சிக்கான தேவைப்பாடானது முன்னுரிமைப்படுத்தப்பட்டது. சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் நடைமுறைப்படுத்தலின் ஊடாக ஏழ்மையிலுள்ளவர்களினதும் பாதிக்கப்படக்கூடியவர்களினதும் வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கும் அரசாங்கத்தினால் விசேட கவனம் செலுத்தப்பட்டது. மேலும், ஊழலுடன் தொடர்புடைய பாதிக்கப்படக்கூடியதன்மைகளை நிவர்த்திசெய்வதற்கான வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறைந்தளவிலான பணவீக்க மற்றும் குறைந்தளவிலான வட்டி வீதச் சூழல் உறுதியான நிதியியல் துறையொன்றுடன் இணைந்து இலங்கை அதன் உள்ளார்ந்த ஆற்றலை அடைவதற்குச் சாதகமான சூழலொன்றினை உருவாக்கியுள்ளது. மேலும், பேரண்டபொருளாதார கொள்கை ஒத்திசைவுகளுடன் இணைந்து, சாதகமான சந்தை மனோபாவங்கள் மற்றும் நிலையான அரசியல் நிலைமைகள் என்பன நாடு சுபீட்சமடைவதற்கான சூழலை அமைத்துள்ளன. இருப்பினும், உயர்வடைந்த உலகளாவிய புவிசார் அரசியல் நிச்சயமற்றத்தன்மைகள் குறிப்பாக, ஐக்கிய அமெரிக்காவினால் முன்மொழியப்பட்ட தீர்வைகளை விதித்தல் மற்றும் அதன் கசிவுத் தாக்கங்கள் வெளிநாட்டுத் துறையிலும் பரந்தளவிலான பொருளாதாரத் தோற்றப்பாட்டிலும் பாதிப்புக்களை ஏற்படுத்தக்கூடும். எனவே, கொள்கை வகுப்பதில் தொடர்ச்சியான முன்மதிமிக்கதன்மைக்கும் வெளிநாட்டு மற்றும் இறைத் தாங்கிருப்புக்களை மேலும் வலுப்படுத்துவதற்குமான கட்டாயத் தேவைப்பாடொன்று காணப்படுகின்றது.

பொருளாதார நெருக்கடியிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கான உறுதியான படிமுறைகளை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியும் மேற்கொண்டுள்ளன. பன்னாட்டு நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதிய வசதி நிகழ்ச்சித்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் மற்றும் படுகடன் மறுசீரமைப்பு முயற்சிகள் என்பன இம்மீட்சிப் பயணத்தின் முக்கிய தூண்களாகக் காணப்பட்டன. பேரண்டபொருளாதாரச் சீராக்க நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப கட்டத்தில் உறுதிப்பாட்டை மீட்டெடுப்பதற்கான பெரும்பாலான முக்கிய சீர்திருத்தங்கள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவுசெய்யப்பட்டமை வரவேற்கத்தக்கதாகும். குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளபோதிலும், பயணம் இன்னமும் முடிவடையவில்லை. பேரண்டபொருளாதார உறுதிப்பாடு தற்போது பெருமளவிற்கு மீட்டெடுக்கப்பட்டுள்ளமையினால் அனைத்து பிரஜைகளின் சுபீட்சத்தினையும் நிச்சயப்படுத்துவதனை உறுதிப்படுத்துகின்ற நாட்டின் நீண்டகால வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான கட்டமைப்புசார் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான அர்ப்பணிப்பானது இன்றியமையாததொன்றாகும்.